மாலை முரசு
கனடா முரசு இணைப்பு
பக்கங்கள் 16 + 05
முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 27 செவ்வாய்க்கிழமை 09.04.2024 அதிர்வு 253

## மின்சாரம் தாக்கி இளைஞர் சாவு!

(வவுணதீவு நிருபர்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சசிக்குமார் டினேஸ் (வயது 19) 04▶

# தமிழ்ப் பொது வேட்பாளரை அடையாளம் காண்பதற்கு முன் தமிழ்ப் பொது அரசியல் அபிலாஷைகளைத் தீர்மானியுங்கள்

### தமிழ்க் கட்சிகளிடம் மனோ எம்.பி. வலியுறுத்து



தமிழ்ப் பொது வேட்பாளரை அடையாளம் காண முன், தமிழ்ப் பொது அரசியல் அபிலாஷைகள் என்ன என்பதைத் தமிழ்க் கட்சிகள் தீர்மானிக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் கொழும்பில் இன்று ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த காலங்களில் தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு - கிழக்கு ஈழத் 04▶

# தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்றது

### தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் சீ.வீ.கே. கருத்து

(எஸ்.நிதர்ஷன்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். கல்வியங்காட்டிலுள்ள தனது அலுவலகத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.




# இராமேஸ்வரம் கடற்றொழிலாளர்களின் படகை மோதிச் சேதப்படுத்திய இலங்கைக் கடற்படை!

### இரும்புக் கம்பியால் தாக்கியதில் 4 மீனவர்கள் காயம்




(மன்னார் நிருபர்)

இந்தியாவின் இராமேஸ்வரம் மீனவர்களின் படகை மோதிச் சேதப்படுத்திய இலங்கைக் கடற்படை, படகில் இருந்த மீனவர்களையும் இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளது. இந்தச் சம்பவத்தில் இராமேஸ்வரம் மீனவர்கள் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இராமேஸ்வரம் மீன்பிடித் துறை முகத்தில் இருந்து நேற்று மீன்பிடிப்பதற்கு அனுமதிச்சீட்டு பெற்று சுமார் 300 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக் 04▶





# யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் முஸ்லிம் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

(பிரபாகரன் டிலக்சன்)

புனித ரமழான் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் முஸ்லிம் குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இன்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் 150 முஸ்லிம் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதன்போது யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி மற்றும் தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.































# அரசே! அரிசி விலையைக் குறை!!

## அம்பாறையில் பெண்கள் ஆர்ப்பாட்டம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

அரிசியின் விலையை 100 ரூபாவுக்கும் கீழ் குறைக்குமாறு கோரி இன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆலையடிவேம்பில் வடக்கு - கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

வடக்கு - கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பின் அம்பாறை மாவட்டத் தலைவி திருமதி கலைவாணி தயாபரனின் தலைமையில் ஆலையடி வேம்பு முருகன் ஆலயம் முன்றலில் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம் பெற்றது .

இதன்போது அவர்கள் பல கோஷங்களை எழுப்பி பதாதைகளைத் தாங்கி நின்றார்கள்.

















# வவுனியாவில் கடும் பனி மூட்டம்

(கே.வசந்தன்)

வவுனியாவில் இன்று காலை அதிக பனி மூட்டம் காணப்பட்டது. கடந்த சில நாட்களாக அதிக வெப்பம் காணப்பட்டு வரும் வவுனியாவில் காலை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டதுடன் வாகன சாரதிகளும் சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர்.

நீண்ட காலத்துக்குப் பின்னர் இவ்வாறான நிலை வவுனியாவில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இராமேஸ்வரம்...

குச் சென்றனர்.

அவர்கள் கச்சதீவுக்கு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது ரோந்து வந்த இலங்கைக் கடற்படை படகு, ஒரு விசைப்படகின் மீது மோதி சேதப்படுத்தியுள்ளது.

விசைப்படகில் இருந்த தங்கம், நம்பேஸ்வரன், மெக்கானிக் உள்ளிட்ட நான்கு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கம்பியாலும் தாக்கியுள்ளனர்.

இதனால் காயமடைந்த மேற்படி மீனவர்கள் இராமேஸ்வரத்திலுள்ள அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர், இராமேஸ்வரம் மீனவர்களைத் தாக்குவதும் கைது செய்வதும் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதால் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இந்திய மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

### மின்சாரம்...

எனும் இளைஞரே உயிரிழந்தவராவார்.

தனது வீட்டில் இரும்பு ஒட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தபோது மின்சாரம் தாக்கப்பட்டு மயக்க நிலையில் இருந்த அவர், அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவானின் பணிப்புரைக்கமைவாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர், சடலத்தை உடற்கூறுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு சட்ட வைத்தியரைப் பணித்திருந்தார்.

உடற்கூறுப் பரிசோதனையின் பின் சடலம் இன்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### தமிழ்ப் பொது...

தமிழ் உடன்பிறப்புகள், தென்னிலங்கை தமிழ் வேட்பாளர்களுக்கு தாராளமாக வாக்களித்தார்கள். ஒருமுறை தேர்தலைப் பகிஷ்கரித்தார்கள். இந்த இரண்டு செயன்முறைகளும் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டைத் தராத காரணத்தால்தான், இன்று தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற யோசனை முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்படுகின்றது. இதன் சாத்தியப்பாடு, பயன்பாடு தொடர்புகளில் கவனமாக ஆராய வேண்டும்.

இவ்விதமாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிடுவார் எனில் அவருக்குத் தமிழ் வாக்காளர்கள், குறிப்பாக வடக்கு – கிழக்கு தமிழ் வாக்காளர்கள் ஒட்டு மொத்தமாக வாக்களிப்பார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும். அடுத்தது, இதன் மூலமாக முழு உலகுக்கும் இலங்கைத் தமிழர்கள் சார்பில் என்ன சொல்லப்படவுள்ளது என்பது தீர்மானிக்கப்பட வேண்டும்.

தமிழ்ப் பொது அரசியல் அபிலாஷைகள் என்ன? குறிப்பாக, அது பதின்மூன்றின் முழுமையான அமுலாக்கமா? பதின்மூன்று "ப்ளசா"? சமஷ்டியா? வடக்கு – கிழக்கு இணைப்பா? இவை குறித்து முதலில் பொது முடிவுக்குத் தமிழ்க் கட்சிகள் வர வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் சில கட்சிகள், இன்று, ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் எனக் கோருகின்றன. அவற்றின் சாத்தியப்பாடு, பயன்பாடு தொடர்பில் பல்வேறு கருத்தோட்டங்கள் இருக்கின்றன. ஆனால், இத்தகைய கருத்துக்களை முன்வைக்க, அந்தக் கட்சிகளுக்கு உரிமை இருக்கின்றது.

ஆனால், பகிஷ்கரிப்பு வேண்டாம். தமிழ்ப் பொது வேட்பாளர் வேண்டும் என்று சொல்பவர்கள், அதன்மூலம் உலகத்துக்கு என்ன சொல்ல விரும்புகின்றார்கள் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். குறைந்த பட்ச அல்லது அதிக பட்ச கோரிக்கைகள், நிலைப்பாடுகள், அபிலாஷைகள் என்ன? என்பவை பற்றி உரையாட வேண்டும்.

இன்னமும் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படவில்லை. அதற்கிடையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெறலாம். மறுபுறம், தேர்தல்கள் ஆணையாளர் என்ன சொன்னாலும் கூட, ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் ஒருசேர நடந்தாலும் ஆச்சரியப்பட முடியாது. ஆகவே, இவை அனைத்தையும் கணக்கிலெடுக்க வேண்டும்.

இதற்கிடையில் எனது பெயரும் தமிழ்ப் பொது வேட்பாளர் பரிசீலனையில் முன்மொழியபட்டுள்ளது. பொது அரசியல் பரப்பில் நாடறிந்த தமிழ்க் கட்சித் தலைவராக நான் இருக்கின்ற காரணத்தால் இப்படியான ஒரு யோசனை சொல்லப்படுகின்றது. இதைச் சொல்ல எவருக்கும் உரிமை உண்டு. இது பற்றி நானும், எனது கட்சியும்தான் தீர்மானிக்க வேண்டும். ஆகவே, இது பற்றி பெரிதும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. இங்கே தமிழ்ப் பொது வேட்பாளரை அடையாளம் காண முன், தமிழ்ப் பொது அரசியல் அபிலாஷைகள் என்ன எனத் தீர்மானிக்க வேண்டும் என்பதுதான் பிரதானமான தேவைபாடாகும்." – என்றார்.

### தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த வேண்டும் என்பது தொடர்பாகப் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் சம்பந்தமாக எங்களுடைய கட்சி இன்னமும் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வரவில்லை. ஆனால், தனிப்பட்ட வகையில் என்னைப் பொறுத்தவரையில் இது எவ்வாறாயினும் நடைமுறைச் சாத்தியமாகாது.

பொது வேட்பாளரைத் தேடிப் பிடிப்பதற்குள்ளேயே முரண்பாடு பல வந்து சேரும். ஏற்கனவே நிலைமைகள் அப்படித்தான் இருக்கின்றன. ஆகவே, தனிப்பட்ட வகையில் என்னுடைய கருத்து என்னவெனில் பேரம் பேச வேண்டிய சூழ்நிலைக்கு ஒற்றுமையாகப் பலமாக நாங்கள் இருக்க வேண்டும். அந்தப் பலத்தோடு நாங்கள் பேரம் பேசலாம்.

ஆனால், ஒரு பொது வேட்பாளர் என்றால் ஏனைய வேட்பாளர்களோடு நாங்கள் சமநிலையில் நிற்கின்றபோது சில சமயங்களில் எங்களது பேரம் பேசும் பலம் குறைவாக இருக்கலாம். அல்லது அவர்கள் எங்களோடு பேரம் பேசாமலும் போகலாம்.

இவ்வாறான சூழல்களும் இருப்பதாலே என்னுடைய தனிப்பட்ட கருத்து இது ஒரு பொது வேட்பாளரைத் தெரிவு செய்வதிலேயே முடங்கி விடும். அல்லது சாத்தியமற்றதாக அமையும். அது பிரதேச வாதங்களுக்கு இடங்கொடுக்கக் கூடிய வாய்ப்பாகவும் அமையும். எனவே, தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம் வேட்பாளரைத் தெரிவு செய்வதிலேயே முடங்கி விடும். அல்லது சாத்தியமற்றதாக அமையும்.

பொது வேட்பாளர் தெரிவில் பொது வேட்பாளர் எந்தக் கட்சி என்ற விடயத்தில் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். ஆகவே, அனைத்து விடயங்களையும் பார்க்கின்றபோது இது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதே என்னுடைய தனிப்பட்ட கருத்து. ஆனாலும், கட்சி இனிக் கலந்து பேசி முடிவுக்கு வரலாம். அதன் பிறகு அதனோடு நாங்கள் உடன்படுவதா? இல்லையா? என்பதையும் தீர்மானிக்கலாம்." – என்றார்.

# குளியல் தொட்டிக்குள் மூழ்கி பெண் குழந்தை உயிரிழப்பு!

(வவுணதீவு நிருபர்)

நீர் நிரம்பிய பிளாஸ்டிக் குளியல் தொட்டிக்குள் மூழ்கி இரண்டரை வயது பெண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவிலங்கடிதுறை, ஆரையம்பதி பகுதியில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குழந்தையைக் குளியல் தொட்டிக்குள் குளிக்கவிட்டு தாய் ஆடைகளைக் கழுவிக்கொண்டிருந்த நிலையில் குழந்தை நீரில் மூழ்கியுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# மட்டக்களப்பில் இடம்பெற்ற ஆரோக்கிய நடை பவனி!

(பழுவூரான்)

தேசிய ரீதியில் தொற்றா நோய்களைத் தடுக்கும் நோக்கத்துடன் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஆரோக்கிய மாதத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை (07) மட்டக்களப்பில் மாபெரும் நடைபவனி ஒன்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எந்திரி என்.சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நடைபவனியானது மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனை வளாகத்தில் இடம்பெற்ற உடற்பயிற்சியைத் தொடர்ந்து அங்கிருந்து ஆரம்பிக்கப்பட்டு மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபுரத்தை சென்றடைந்து அங்கிருந்து காந்தி பூங்கா வழியாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்குஅருகாமையில் அமைந்துள்ள கோட்டை பூங்கா வளாகத்தை சென்றடைந்தது.

நடைபவனி நிறைவடைந்ததை அடுத்து கோட்டை பூங்கா வளாகத்தில் பிராந்திய சுகாதார பணிமனையின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு மாநகர சபையால் பராமரிக்கப்படவிருக்கும் திறந்த வெளி உடற்பயிற்சி நிலையம் அதிதிகளால் நாடா வெட்டி பொது மக்கள் பாவனைக்காக உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த நடைபவனிக்குப் பிரதம அதிதிகளாக வடமாகாண சுகாதார அமைச்சின் (பதில்) பணிப்பாளரும், யாழ்ப்பாண வைத்தியசாலையில் பணிப்பாளருமாகிய வைத்திய கலாநிதி ரீ.சத்தியமூர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், முன்னாள் மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரும் தற்போதைய வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையின் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர்கள், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், ஏனைய திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



மாவட்ட மக்களின் உடல், உள நல மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு முன்னாள் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளரும் தற்போதைய வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி ஜீ.சுகுணனின் எண்ணக் கருவில் உதித்த திட்டத்துக்கு அமைவாகவே திறந்த வெளி உடற்பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சாத்தானின் வேதம்

இந்த நாட்டின் அரசியல் தலைவர்கள், சாத்தான்கள் போல வேதம் ஓதலாம். ஏனென்றால் இங்கு தட்டிக் கேட்டு மறுப்பதற்கு யாரும் இல்லை என்ற - மிதப்பு - தடிப்பு - தான் காரணம்.

அத்தகைய விதத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறிய கருத்து ஒன்றை இப்போது தட்டிக் கேட்க முற்பட்டிருக்கின்றார் எதிர்க்கட்சித் தரப்பு எம்.பியான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

''ஆசியாவிலேயே ஜனநாயகம் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டு, எதிர்க்கட்சிகளின் உரிமைகள் உறுதி செய்யப்பட்ட ஒரே நாடு இலங்கைதான்'' என்று இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஓதிய வேதவாக்கியத்தை தான் இப்போது கேள்விக்குட்படுத்தி இருக்கின்றார் பேராசிரியர் பீரிஸ்.

தேர்தல் என்றாலேயே - பொதுமக்களை எதிர்கொள்வது என்றாலேயே - தொடை நடுங்கிப் போக்கை வெளிப்படுத்துபவர் ரணில் விக்கிரமசிங்க. அவர் ஜனநாயகத்தை மீட்டுக் கட்டிக் காத்தவர் என்று படம் போடுவது ரொம்பவும் மிகைப்படுத்தப்பட்ட அரசியல் பிரச்சாரம்தான்.

நாட்டின் பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு முப்பது வருடங்களாக அவர் தலைமை வகிக்கின்றார். இந்த முப்பது ஆண்டு காலமும் தேசிய மட்டத்திலும் மாகாண மட்டங்களிலும் நடைபெற்ற பெரும்பான்மையான - அனேகமான - தேர்தல்களில் எல்லாம் அவரது கட்சி மண் கவ்வியே வந்திருக்கின்றது. அதனால் இந்தத் தேர்தல்கள் என்றாலேயே அவருக்குப் பொருந்தி வராது - அதிருப்தி தருவது - என்பது தெரிந்த விவகாரம்தான்.

நல்லாட்சி அரசில் தாம் பிரதமராக இருந்தபோது, வர இருந்த இரண்டு மாகாண சபைகளுக்கான தேர்தல்களை எதிர்கொள்ளும் அச்சத்தில் மாகாண சபை தேர்தல் முறைமைக்கே நிரந்தரமாக ஆப்படித்தவர் இந்த ரணில் விக்கிரமசிங்கதான்.

இப்போது, அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு ஆண்டுகள் எட்டும் நிலையில், ஓரிரு மாதங்களிலேயே அந்த மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மீண்டும் செய்யும் முழு அதிகாரமும், உரிமையும், நாடாளுமன்றப் பலமும் இருந்தும் கூட அதை செய்ய முயலாதவர் அவர்.

அப்படி இருக்க, தம்மை ஒரு ஜனநாயக மீட்பர் போல அவர் படம் போடுகின்றார் - சாத்தான் தன்னை இறைவனாகக் காட்ட முயல்வது போன்று.

சுமார் ஓராண்டுக்கு முன்னர் நடந்து முடிந்திருக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலை நிதி அமைச்சர் என்ற முறையில் தமக்கு இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தேர்தலுக்கான நிதியை வெட்டியமை மூலம் அதை நிரந்தரமாக முடக்கியவர் ரணில்தான்.

இப்போது ஜனாதிபதித் தேர்தலைத் தாம் எதிர்கொண்டாக வேண்டும் என்ற கட்டாயம் வந்ததும் நாட்டின் நிதி நிலைமையைத் தான் நிமிர்த்தி விட்டார் போல நாடகமாடுகின்றார். ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளைச்சுருட்டுவதற்காக புதிய, புதிய திட்டங்கள், மானியங்கள், மக்கள் உதவி முறைகள் பற்றி எல்லாம் தினசரி ஓர் அறிவிப்பை வெளியிடுகின்றார். ஜனாதிபதி தேர்தலில் வாக்கு வேட்டைக்காக இவற்றுக்கெல்லாம் பல்லாயிரம் கோடி ரூபாவைத் தாரை வார்க்கக்கூடிய நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, நாட்டின் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதியை ஒதுக்க முடியவில்லை. யாரின் காதில் பூசுற்றுகின்றார் அவர்?

இந்தச் சித்துவத்தில் ஆசியாவிலேயே ஜனநாயகம் முறையாகப் பேணப்பட்ட நாட்டின் தலைவர் தாம் என்ற கதையை அவிழ்த்து விடுகின்றார் அவர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவரும் அவரது கட்சியினரும் நாட்டின் முழு மக்களாலும் நிராகரிக்கப்பட்டு, அரசியல் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசப்பட்டனர். தேர்தலில் மக்கள் ஆணையை இழந்தவர் அவர். எந்த மாவட்டத்திலும் அவரது கட்சிக்கு விழுந்த வாக்குகள் பின்னர் விருப்பு வாக்குகளுக்காக எண்ணப்படுவதற்குக் கணக்கிலேயே எடுக்கப்படவில்லை.

அப்படிப்பட்டவர் பின் கதவால் ஜனாதிபதிக்கு வந்தார். நாட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டவர் இன்னொரு கட்சியின் தலைவரின் தயவில் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகக் கோலோச்சுகின்றார். இது ஜனநாயக செழிப்பு அல்ல. ஜனநாயக அழிவு. பின்னடைவு. ஜனநாயகத்தின் பெயரால் நடக்கும் கேலிக்கூத்து.

அத்தகையவர் ஆசியாவிலேயே ஜனநாயகம் முழுமையாக பாதுகாக்கப்பட்ட நாடு இலங்கை என்று தத்துவம் பிளப்பது சாத்தானினது வேதம்தான்.



# சம்மாந்துறை சமூகசேவை அமைப்பால் உலருணவு பொதிகள் வழங்கிவைப்பு

(தில்சாத் பர்வீஸ் )

சம்மாந்துறையைப் பிரதிநிதித்துவபடுத்தி இயங்கிவரும் சமூக சேவை அமைப்பானது கடந்த 11 வருடங்களாக இயங்கி வருகிறது.

இவாஸ்ட் சமூக சேவைகள் அமைப்பால் கடந்த வருடங்கள் போல் இந்த வருடமும் மிகவும் சிறப்பான முறையில் வறிய மக்களை இனம்கண்டு அவர்களுக்கான உலருணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்பு வருடாவருடம் முன்னெடுக்கும் இந்தச் செயற்றிட்டமானது அமைப்பின் அங்கத்தவர்கள், தனவந்தர்களின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படுகிறது.

இதன்போது அமைப்பின் அங்கத்தவர்களால் உலர் உணவு பொதிகள் சுமார் 70 மேற்பட்டவர்களுக்கு வழங்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# அட்டாளைச்சேனையில் கலாசார நிகழ்வில் பரிசளிப்பு

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை அல்-இபாதா கலாசார மன்றத்தின் ஏற்பாட்டில் புனித ரமழான் மாதத்தில் இடம்பெற்ற 13 ஆவது வருட ஹதீஸ் மஜ்லிஸ் வினா விடை போட்டி வெற்றியாளர்க ளுக்குப் பொற் கிழியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் (05) அண்மையில் நடைபெற்றன.

உலமாக்கலான யு. எல். எம். நியாஸ், ஏ. எல். நசீர் மற் றும் கலாச்சார உத்தியோகத்தர் எம். எஸ். ஜெளபர் ஆகி யோர் பரிசில்களை வழங்கினர்.

# சட்டவிரோத பதிவாளர் அலுவலகம் முற்றுகை; சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விசாரணை!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்திலுள்ள வீடொன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் நடத்திச் செல்லப்பட்ட சட்ட விரோத பதிவாளர் அலுவலகமொன்று விஷேட அதிரடிப்படையினரால் திடீர் சுற்றிவளைப்பு செய்யப்பட்டதில் மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 205 தரிசுக் காணிக்கான உறுதிப் பத்திரங்கள், 58 வெற்று உறுதிப் பத்திரங்கள், 63 காணி மாற்று உறுதிப் பத்திரங்கள், வெவ்வேறு அதிகாரிகளின் உத்தியோக பூர்வமாக கையொப்பத்துடன் கூடிய 30 பத்திரங்கள், 12 தேசிய அடையாள அட்டைகளின் பிரதிகள் என்பன மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மேலதிக விசாரணைக்காக விஷேட அதிரடிப்படையினர் காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# சுற்றுச்சூழல் பாதுகாப்புகள் தொடர்பாக விளக்கமளிக்கும் செயலமர்வு மன்னாரில்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அரச திணைக்களம் மற்றும் தனியார் அமைப்புகளில் கடமையாற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கி மாவட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த செயலமர்வில் சுற்றுச்சூழல் தொடர்பாகவும் குறிப்பாக மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

குறிப்பாக மன்னாரில் கழிவகற்றல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில் மன்னார் நகரில் ஏற்பட்டுள்ள சுகாதார பாதிப்புகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகளை எதிர்காலத்தில் எவ்வாறு மாற்றியமைக்க முடியும் என்பது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தியின் சாதக பாதக நிலை,கணிய மணல் அகழ்வால் ஏற்பட்டுள்ள சவால்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

செயலமர்வில் கொழும்பில் உள்ள எஸ்.ஐ.பி.எல். நிறுவனத்தின் முகாமையாளர் மற்றும் நிறுவனத்தின் சுற்றுச் சூழல் பிரதி நிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.






# மாதுளை சேகரிப்பு, பதப்படுத்தும் நிலையம் ஏறாவூர்பற்றில் ஆளுநரால் திறந்து வைப்பு!

(நூருல் ஹுதா உமர் )

விவசாயிகள் மத்தியில் பழச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் மாதுளை சேகரிப்பு மற்றும் பதப்படுத்தும் நிலையத்தை ஏறாவூர் பற்று பிரதேசத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்துள்ளார்.

விவசாயிகளின் விளைச்சலை அதிகரிப்பதற்காக விவசாயச் சங்கங்களுக்கு விவசாய உபகரணங்களையும், மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கும் உபகரணங்களையும் ஆளுநர் வழங்கி வைத்தார்.



இந்த நிகழ்வில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் சாதாசிவம் வியாழேந்திரன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரத்தினம், கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர் உட்பட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ஒலுவில் பிரதேசத்தில் பொதுக் கிணறு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

நீண்ட காலத் தேவையாக காணப்பட்ட, பொதுக் கிணறு ஒன்றை அமைத்துத் தருமாறு ஒலுவில் பிரதேச நடுத்துறை மீனவர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, வை.டபிள்யூ.எம்.ஏ. பேரவையின் ஒருங்கிணைப்பில், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் மிகவும் குறுகிய நாள்களுக்குள் பொதுக் கிணறு ஒன்றை அமைத்து மீனவர்கள் பாவனைக்காக திறந்து வைத்தார்.இதன்போது, ஒலுவில் பிரதேச நடுத்துறை மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு இடைஞ்சலாக இருக்கும் கற்பாறைகளை அகற்றித் தருமாறு கொரிக்கை விடுக்கப்பட்டது.

அந்தக் கோரிக்கையை அடுத்து சுழியோடிகள் மூலம் பெறப்பட்ட தகவலுக்கு அமைவாக அடுத்த கட்டமாகச் செய்ய வேண்டிய விடயங்கள் சம்மந்தமான கலந்துரையாடல் ஜம்மியதுல் உலமா, பள்ளி நிர்வாகம், மீனவ சமூத்தினர் மற்றும் ஊர்மக்களுடன் ஒலுவில் பிரதேசத்தில் இடம்பெற்றது.

ஒலுவில் பிரதேசத்தில் இயங்கிவரும் சஹ்வா பெண்கள் அரபுக் கல்லூரிக்குச் சென்று கல்லூரியின் எதிர்கால நலத்திட்டங்கள் சம்மந்தமாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.




# வை.எம்.எம்.ஏ. உலர் உணவு சாய்ந்தமருதில் வழங்கி வைப்பு!

(நூருல் ஹுதா உமர் )

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் ஏற்பாட்டில் தேவையுடைய மக்களுக்கு பல்வேறு உதவிகளை செய்துவரும் 'அல்மா' நிதியத்தின் உதவியுடன் ரமழானை முன்னிட்டு தேவையுடைய மக்களை அடையாளம் கண்டு உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது இளைஞர் வள நிலையத்தில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.ஐ.எம். நியாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் பிரதி தேசிய தலைவர்களான எஸ் . தஸ்தகீர், எம்.ஐ. உதுமலெவ்வை மற்றும் முன்னாள் திட்ட தவிசாளர் கே.எல். சுபைர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் அக்கரைப்பற்று, பாலமுனை, சவளக்கடை, கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு மற்றும் மாவடிப்பள்ளி பிரதேச தலைவர்களும் கலந்து கொண்டனர்.

ரமழானை முன்னிட்டு தேவையுடைய மக்களை அடையாளம் கண்டு 'அல்மா' நிதியத்தின் உதவியுடன் சுமார் 4500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் ஆரம்ப நிகழ்வின்போது வை.எம்.எம்.ஏ. இன் பல்வேறுமட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.





# அக்கரைப்பற்று ஆஸ்பத்திரியில் ஆரோக்கிய உணவகம் திறப்பு!

(சியாத்.எம்.இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் ஆரோக்கிய உணவக மீள் திறப்பு விழா வைத்தியசாலை சுகாதார மேம்பாட்டு திறந்த கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வைத்தியசாலைகளில் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வேலைத்தள சூழலை உருவாக்குதல் எண்ணக்கருவின் கீழ், ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய உணவுகளை சகல மத கலாச்சார மக்களுக்கும் வழங்கும் நோக்கில் சகல வசதிகளுடன் மீள் வடிவமைக்கப்பட்ட வைத்தியசாலை உணவகத்தை, பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸின் தேசிய தலைவரும் வைத்தியசாலை ஸ்தாபகருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாவால் திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர்.ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் வழிகாட்டுதலில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வைத்தியசாலை குழுவின் தலைவர் பொறியியலாளர் எம்.வை. அப்துஸ் சமட் மற்றும் இப்தார் குழு தலைவரும் பொது சத்திர சிகிச்சை நிபுணருமான டாக்டர நிப்ஷான் ஜெமீல் உள்ளிட்ட வைத்திய நிபுணர்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், வைத்திய உத்தியோகத்தர், வைத்தியசாலை குழு உறுப்பினர்கள், தாதி உத்தியோகத்தர், அலுவலக உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அக்கரைப்பற்று ஜம்யத்துல் உலமா சபை தலைவர் மௌலவி எம்.ஐ.எம். சித்திக் மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார். நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா சேவையைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.






# அரிசி விற்பனை விலையை உடனடியாகக் குறையுங்கள்!

## மன்னாரில் பெண்கள் கவனவீர்ப்பு!!

(மன்னார)

அரசு உடனடியாக அரிசியின் விலையை 100 ரூபாவுக்குக் கீழ் கொண்டு வருமாறு கோரி வடக்கு, கிழக்கு பெண்கள் கூட்டின் ஏற்பாட்டில் இன்று வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் மன்னார் மாவட்டத்திலும் இன்று செவ்வாய்க்கிழமை (9) கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் நடைபெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தில் நூற்றுக் கணக்கான பெண்கள் கலந்து கொண்டு பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர்.

ஒட்டுமொத்த இலங்கை மக்களின் அடிப்படை உணவு அரிசிச் சோறு . அந்த வகையில் தற்காலத்தில் இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும் பொருள்களின் விலையேற்றமும் கிராம மட்டங்களில் உள்ள வறிய மற்றும் நடுத்தர குடும்பங்களில் உள்ள பெண்கள் மற்றும் பிள்ளைகள் மத்தியில் பாரிய உணவு தட்டுப்பாடு மட்டுமல்லாது போசாக்கு குறைபாடுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

பல மக்கள் தங்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ள நிலையில் காணப்படுகின்றனர்.

குறிப்பாக இலங்கையில் கடந்த



காலங்களிலும் தற்போதும் ஏற்பட்டுள்ள அரிசியின் விலை ஏற்றம் என்பது நாளாந்தம் தினக்கூலி வேலை செய்யும் குடும்பங்களுக்கும் கூடுதலான அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களிலும் மூன்று வேளையும் உணவு உண்பதற்கு பதிலாக ஒன்று அல்லது இரண்டு வேளைகளில் மட்டுமே உணவை பெற்றுக்கொள்ள கூடிய நிலையில் உள்ளனர்.

சில குடும்பங்களில் சோறு இல்லாமல் கஞ்சி காய்ச்சி குடித்து கொண்டு இருக்கின்றனர். பெண் தலைமை தாங்கும் குடுமபங்களில் இந்த அரிசியின் விலை ஏற்றம் இன்னும் பட்டினிக் குத் தள்ளியுள்ளது.

தொடர்ச்சியாக நாட்டில் ஏற்பட்ட யுத்தம் , கொவிட் தாக்கம், வெள்ளம், வறட்சி மற்றும் தற்கால பொருளாதார நெருக்கடி அடி நிலையிலுள்ள வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தின் உணவுத் தேவையில் அதிக தாக்கத்தை செலுத்தியுள்ளது.

சிறுவர்கள் கர்ப்பிணித் தாய்மார்கள் பெண்கள் அனைவரும் தமது பசியினைப் போக்குவதற்காக போசாக்கற்ற உணவுகளை உண்ண வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையால் நாட்டில் போசாக்கற்ற குழந்தைகள் பிறக்கின்றன. நோய்த்தாக்கங்களுக்கும் உள்ளாகின்றன. அத்துடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் வறுமை காரணமாகச் சாப்பிடாமல் பாடசாலைகளில் மயங்கி விழுந்துள்ள சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

முதியோர், தொழில் இழந்த ஆண்கள், வறுமைப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் என பலர் தரப்பினரும் உணவுக்காக வீதிகளில் கையேந்துவதை இலங்கை முழுவதும் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே இலங்கை அரசு மக்களின் வேண்டுகோளையும் பசியின் கொடூர நிலையையும் கவனத்தில் கொண்டு இலங்கையில் அரிசியின் விலையை நூறு ரூபாவுக்குக் கீழ் உடனடியாக கொண்டு வரவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

மக்களின் வறுமை நிலை போக்கி மக்கள் மூன்று வேளையும் பசியின்றி சோறு உண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறோம்.

இலங்கை அரசு மக்களின் சோற்றில் கை வைக்காமல் அரிசியின் விலையை 100 ரூபாவுக்குக் கீழ் குறைத்து மக்களின் பட்டினிச் சாவைத் தவிர்த்து மக்களின் பொருளாதார சுமையை குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கின்றோம் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இறுதியில் விழிப்புணர்வுச் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன.





# ஊட்டச்சத்தை மேம்படுத்தும் திட்டம் நுவரெலியாவில் ஆரம்பித்து வைப்பு





(தலவாக்கலை)

சிவில் சமூக அமைப்புக்களின் மேம்படுத்தப்பட்ட சேவை வழங்கல் மற்றும் அதிகாரமளித்தல் மூலம் பெருந்தோட்டங்கள் மற்றும் கிராமப்புற சமூகங்களின் ஊட்டச்சத்தை மேம படுத்தும் திட்டம் ஐரோப்பிய ஒன்றி யத்தின் நிதி பங்களிப்பில் அட்ரா தனியார் நிறுவனத்தின் ஊடாக செயல்படுத்தப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு நுவரெலியா அரலிய விடுதியில் இடம்பெற்றது.

அட்ரா தனியார் நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் மெத்தியூ வித்தி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக அதிகாரிகள், அரச நிறுவன முக்கி யஸ்தர்கள், தனியார் நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவி மூலம் அட்ரா நிறுவனத்தின் ஊடாக மலையக பிரதேசங்களில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் கடந்த 10 ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் வாழ்ந்து வருவதை அவ தானித்து இந்த நிறுவனம் தொடர்ச் சியாகக் குடி தண்ணீர் திட்டம், சிறுவர் அபிவிருத்தி சுகாதார வேலைத் திட்டங் கள், தொழில் வாய்ப்பு வழங்குதல், தேயிலை பறிக்கும் பெண்களுக்கு சுகா தார நிலையங்களை முன்னெடுக்கும் நோக்கில் தேயிலை மலைகளில் ஓய்வறைகள் அமைத்தல், மலசல கூடங்களை நிர்மாணித்தல், உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.மக்கள் மத்தியில் விழிப்புணர்வு செயல் திட்டங் களையும் முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் தற்போது புதிய வேலை திட்டமாக பிரதேசங்களில் இயங்கும் சிவில் அமைப்புகள் மற்றும் அடிப்படை அமைப்புகளை தெரிவு செய்து அதனை சக்திப் படுத்தி அவர் களின் பணிகளை மேம்பட செய்வதற் கான திட்டத்தை இந்த ஆண்டு முன்னெ டுப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.



# புத்தாண்டுச் சந்தை திறப்பு!

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் விடுதியில் புத்தாண்டு சந்தை இன்று (09) திறந்து வைக்கப்பட்டது.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்கு தேவையான சகல பொருள்களையும் பெற்றுக்கொள்ள வாடிக்கை யாளர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள் ளது.

இந்த சந்தையில் துணிக்கடை, பாண் கடை, பால் கடை, இனிப்பு கடை, பலகாரக் கடை மிட்டாய் கடை, மட் பாண்டக் கடை மற்றும் தொதல் கடை உள்ளிட்ட பல கடைகள் உள்ளன.

இந்த நிகழ்வில் வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனத்தின் தலைவர் மலித் பெரேரா, நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.






# தென் சென்னையில் களைகட்டிய பிரச்சாரம்

தென் சென்னையில் கனிமொழி, டி.ராஜா, வானதி சீனிவாசன் ஆகியோர் தங்களுடைய வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அ.தி.மு.கவினர் வீடு வீடாக ஆதரவு திரட்டி வருகின்றனர்.

தென் சென்னை மக்களவை தொகுதியில் விருகம்பாக்கம், தி.நகர், சைதாப்பேட்டை, மயிலாப்பூர், வேளச்சேரி, சோழிங்கநல்லூர் என 6 சட்டப்பேரவை தொகுதிகள் அடங்கியுள்ளன.

நட்சத்திர அந்தஸ்தை பெற்றுள்ள இந்த தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியன், அ.தி.மு.க. வேட்பாளர் ஜெ.ஜெயவர்தன், பா.ஜ.க. வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜன், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சு.தமிழ்ச்செல்வி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

காலில் பிரச்சினை இருந்தாலும் ஊன்றுகோளுடன் தினந்தோறும் காலையும், மாலையும் தென் சென்னை தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாகன பிரச்சாரத்தில் ஈடுபட்டு மக்களை சந்தித்து வருகிறார் தமிழச்சி தங்கபாண்டியன்.





இவரை ஆதரித்து காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம், ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன், மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. உள்ளிட்டோரும் வாக்கு சேகரித்துள்ளனர்.

நேற்று மாலை, சைதாப்பேட்டையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தமிழச்சி தங்கபாண்டியனுக்கு ஆதரவாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா பேசுகையில்,

“பா.ஜ.க. ஆட்சியில் இந்தியாவின் மதச்சார்பற்ற ஜனநாயகம் தகர்க்கப்படுகிறது. நம்முடைய வாழ்க்கையில், வரலாற்றில் இந்த தேர்தல் முக்கியமானது. பா.ஜ.கவிடம் இருந்து இந்தியாவை காப்பாற்ற வேண்டும். இந்தியாவை மீட்க வேண்டும்” – என்றார்.

“மக்களவை தேர்தல் என்பது மிகவும் முக்கியமானது. எத்தனை வேட்பாளர்கள் களத்தில் நின்றாலும் எங்களுக்கு இருக்கும் தனித்தகுதி என்ன வென்றால், பிரதமர் வேட்பாளர் யார் என்று சொல்லி நாங்கள் தேர்தலை சந்திக்கிறோம்.” என்று தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இவருக்கு ஆதரவாக பா.ஜ.க. மாநில துணைத் தலைவர் கரு. நாகராஜன், பா.ஜ.க. தேசிய செயற்குழு உறுப்பினர் குஷ்பு, தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன், நடிகை நமிதா உள்ளிட்டோரும் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

# தமிழ் நாடு, திருப்பூரில் வீதி விபத்து: ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் பலி

திருப்பூர். வெள்ளகோவில் அருகே காரும், பஸ்ஸும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்தனர்.

ஒருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



திருப்பூரைச் சேர்ந்த சந்திரசேகர், சித்ரா தம்பதியரின் 60 ஆவது திருமண நாளை கொண்டாடுவதற்காக நேற்றைய தினம் திருக்கடையூர் சென்றுவிட்டு திருப்பூர் நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

இன்று அதிகாலை வெள்ளகோவிலை கடந்து திருப்பூர் நோக்கி வந்து கொண்டிருந்தபோது ஓலப்பாளையம் என்னும் இடத்தில் திருச்சி நோக்கி சென்று கொண்டிருந்த அரசு பஸ் சந்திரசேகர் செலுத்திய கார் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில் காரில் பயணித்த சந்திரசேகர், சித்ரா மற்றும் இளவரசர், அரிவித்ரா மூன்று மாத குழந்தை சாக்சி ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் காரில் பயணித்த மற்றொரு நபர் படுகாயங்களுடன் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்த விபத்து காரணமாக கோவை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

உடனடியாக வெள்ளகோவில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று கார் மற்றும் பஸ்ஸை மீட்டு போக்குவரத்தை சீர் செய்தனர் .

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இயக்குநர் அமீரின் வீட்டில் அமலாக்கத்துறை சோதனை



போதைப் பொருள் கடத்தல் வழக்கு தொடர்பாக சென்னையில் உள்ள ஜாபர் சாதிக் வீடு, இயக்குநர் அமீரின் வீடு, அலுவலகம் உள்பட 30 இற்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் இன்று காலை முதல் அதிரடி சோதனை மேற்கொண்டுள் ளனர்.

சென்னை மயிலாப்பூர், கொடுங் கையூர், நீலாங்கரை, தியாகராய நகர் எனப் பல பகுதிகளிலும் சோதனை நடைபெற்றது.

முன்னதாக, உணவுப் பொருள் ஏற்றுமதி என்ற பெயரில், இந்தியா வில் இருந்து நியூசிலாந்து, அவுஸ் திரேலியா உட்பட பல்வேறு நாடுக ளுக்கு போதைப் பொருள் கடத்திய புகாரில் ஜாபர் சாதிக் கைது செய்யப்பட் டார்.

அவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், தமிழ் திரைப்பட நடி கரும், இயக்குநருமான அமீருக்கு போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் அழைப்பாணை வழங்கி னர். அமீருடன் சேர்த்து அப்துல் பாசித் புகாரி, சையது இப்ராஹிம் ஆகிய 3 பேருக்கு டில்லி என்.சி.பி. அதிகாரிகள் அழைப்பாணை அனுப்பி இருந்தனர். அவர்கள் மூன்று பேரும் டில்லியில் உள்ள போதைப் பொருள் தடுப்பு பிரிவு அலுவலகத்தில் கடந்த ஏப்ரல் 2 ஆம் தேதி ஆஜராக அழைப்பாணை அனுப் பப்பட்டு இருந்தது.

அமீரிடம் பல மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. அவருடைய வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன. தேவைப்பட்டால் மீண்டும் விசாரணைக்கு ஆஜராக வேண்டியிருக்கும் எனச் சொல்லி அனுப்பப்பட்டார்.

இந்த நிலையில் இன்று காலை முதல் சென்னை தியாகராய நகர் ராஜன் தெருவில் உள்ள இயக்குநர் அமீர் அலுவலகத்தில் அமலாக்கத் துறை யினர் சோதனை செய்தனர். அதேபோல் இயக்குநர் அமீர் வீட்டிலும் அமலாக்கத் துறை சோதனை நடத்தினர்.

மேலும், ஜாபர் சாதிக்கின் சாந்தோம் வீடு, அப்துல் பாசித் புகாரி வீடு மற்றும் அவருக்குச் சொந்தமான இடங்கள் என சென்னையில் 30 இற்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத் துறை அதி காரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

# தமிழர் உரிமை பற்றி பேச தி.மு.கவுக்கு தகுதியில்லை

## ராஜ்நாத் சிங் விமர்சனம்



இலங்கைக்கு கச்சதீவை பரிசாக கொடுத்த காங்கிரஸுக்கும், தி.மு.க வுக்கும் தமிழர் உரிமைகள் குறித்துப் பேச தகுதியில்லை என மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ் நாத் சிங் தெரிவித்துள்ளார்.

நாகை மக்களவைத் தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் எஸ்.ஜி.எம். ரமேஷ் கோவிந்தை ஆதரித்து, தேசிய ஜன நாயக கூட்டணியின் சார்பில் திருவாரூர் தெற்கு வீதியில் நேற்று பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், மத்திய பாது காப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உரையாற்றுகையில்,

“பிரதமர் மோடியின் 10 ஆண்டு கால ஆட்சியில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இன்று இந்தியா உலகின் 5 ஆவது பெரிய பொருளாதார நாடாகவும், பொருளாதாரம் வேகமாக வளரும் நாடாகவும் மாறியுள்ளது.

இதற்கு பிரதமர் மோடியின் நுட்பமான ஆட்சித் திறனே காரணம். இதன் காரணமாக நாட்டில் சாமானிய குடி மகன்கள் கூட சிறிய பணப் பரிவர்த் தனைகளைக் கூட டிஜிட்டல் முறை யில் செய்து பயனடைந்து வருகிறார்கள். நாட்டிலேயே தமிழகத்திலும், உத்தர பிரதேசத்திலும் மட்டுமே 2 பாதுகாப்பு வழித்தடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மோடி அரசில் இளைஞர்கள் வேலை தேடுபவர்களாக இல்லாமல் வேலை கொடுப்பவர்களாக மாற வேண்டும் என்கின்ற நோக்கத்தில் 1.25 லட்சம் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தொடங் கப்பட்டுள்ளன. ஆனாலும், நாட்டின் வளர்ச்சிக்கு காரணமாக உள்ள மோடி குறித்து அவதூறுகளை பரப்பி வரு கிறார்கள். சேற்றை வாரி இறைக் கிறார்கள். எவ்வளவு சேற்றை வாரி இறைக்கிறார்களோ, அதே அளவுக்கு தாமரை மலரும் என்பதில் சந்தேகம் இல்லை.

இலங்கையில் தமிழர்களுக்கு நடந்த அநீதிக்கும், கச்சதீவு இழப்புக்கும், மீனவர் பிரச்சினைகளுக்கும் தி.மு.க, காங்கிரஸ் கட்சிகள்தான் பொறுப்பு. இந்த 2 கட்சிகளும் சேர்ந்துதான் இலங்கைக்கு கச்சதீவை பரிசாக கொடுத்தன.

இதனால் அவர்கள் தமிழர்கள், மீன வர்கள் உரிமை குறித்துப் பேச எந்தத் தகுதியும் இல்லை. தேசம் தான் முதன்மையானது என்பது எங்கள் நோக்கம். ஆனால், குடும்பம் தான் முதன்மையானது என்பது எதிர்க்கட்சி யினரின் நோக்கம்.” – என்றார்.

# மொசாம்பிக் கடற்பரப்பில் படகு கவிழ்ந்து 90 பேர் பலி







மொசாம்பிக் கடற்பரப்பில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 90 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

தென்கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள ஒரு சிறிய நாடாக மொசாம்பிக் குடியரசு உள்ளது. இந்த நாட்டின் வடக்கு கடற்கரை வழியாக ஒரு மீன்பிடி படகில் நேற்று சுமார் 130 பேர் பயணம் செய்துள்ளனர்.

நம்புலா மாகாணத்திலிருந்து தீவை நோக்கி அந்தப் படகு வந்தபோது எடை தாங்காமல் படகு மூழ்கியுள்ளது.

இதில் அதிலிருந்த 90 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதுதொடர்பாக நம்புலா மாகாணச் செயலாளர் ஜெய்ம் நெட்டோ கூறும் போது,

“அதிகம் பேர் பயணித்ததாலும், மோசமான நிலையில் இருந்ததாலும் படகு கவிழ்ந்துள்ளது. இந்த விபத்தில் 90 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பலர் குழந்தைகள் எனத் தெரியவந்துள்ளது. சம்பவ இடத்தில் இருந்து இதுவரை 5 பேரை உயிருடன் மீட்டுள்ளோம். மேலும், பலரை தேடி வருகிறோம்.

ஏராளமான நபர்களின் உடல்களை மீட்டுள்ளோம். நம்புலா பகுதியில் கொலரா பரவுவதாக தகவல் வந்தது. இதனால் ஏற்பட்டபீதியின் காரணமாக பெரும்பாலான மக்கள் அங்கிருந்து படகு மூலம் தப்பிக்க முயன்றனர். அப்போதுதான் இந்த கோரச் சம்பவம் நடந்துள்ளது.” – என்றார்.

இதுதொடர்பாக விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பாலின மாற்று அறுவைச் சிகிச்சை குறித்து வத்திக்கான் அலுவலகம் சர்ச்சைக் கருத்து



பாலின மாற்று அறுவைச் சிகிச்சை மற்றும் வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ளும் நடைமுறையானது மனித கண்ணியத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக விளங்குவதாக வத்திக்கானின் ‘கோட்டுபாடு அலுவலகம்‘ அறிவித்துள்ளது.

போப் பிரான்சிஸ்ஸின் ஒப்புதலுடன் கண்ணியம் தொடர்பாக வத்திக்கானின் கோட்டுபாடு அலுவலகம் வெளியிட்டுள்ள 20 பக்கங்களைக் கொண்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் குறித்த அறிக்கையில், கருக்கலைப்பு மற்றும் கருணைக் கொலை ஆகியவை மனித வாழ்க்கைகான கடவுளின் கொள்கையை மீறும் செயல் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலின கோட்பாடு அல்லது ஒரு பாலினத்தை சேர்ந்தவர் இன்னொரு பாலினத்தை சேர்ந்தவராக மாற முடியும் என்ற கருத்தை வத்திக்கான் அரசு தொடர்ந்து நிராகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# இஸ்ரேல் இராணுவம் வெளியேற்றம்: கான்யூனிஸில் 84 சடலங்கள் மீட்பு

பலஸ்தீனர்களின் நகரான கான் யூனிஸில் இருந்து இஸ்ரேல் இராணு வம் வெளியேறிய நிலையில் அங் கிருந்து 84 உடல்கள் மீட்கப்பட்டுள் ளன என அல் ஜசீரா தெரிவித்துள்ளது.

நோயாளர் காவுவண்டி ஊழியர்கள் இந்த உடல்களை மீட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

தெற்கு காசா நகரத்திலிருந்து இஸ் ரேலியப் படைகள் பின்வாங்கி யதை அடுத்து, பல மாதங்கள் தீவிர இஸ்ரேலிய தாக்குதல்களால் பெரும் பேரழிவு அந்த நகரத்தில் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், சிவில் பாதுகாப் புத் தொழிலாளர்கள் இடிபாடுகளுக்கு அடியில் இருந்து உடல்களை மீட்டு வருகின்றனர் என தெரிவிக்கப்படு கிறது.





# ஹமாஸின் உள்துறை அமைச்சகம் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் பலர் பலி

மத்திய காசாவின் மகாசி முகா மில் உள்ள ஹமாஸ் உள்துறை அமைச்சக கட்டடத்தின் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியதாக பாலஸ்தீன ஊடகங்கள் தெரிவிக் கின்றன.

இந்த தாக்குதலில்மகாசி மேயர் உட்பட குறைந்தது ஐந்து பேர் கொல் லப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள் ளது.

எனினும் தாக்குதல் தொடர்பாக இஸ்ரேல் படைத்தரப்பிலிருந்து தரப் பிலிருந்து உடனடி கருத்து எதுவும் வெளியாகவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.



பக்கங்கள் - 5

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 09/04/2024

## இந்த வாரத்தில் இனி கடும் மழை பெய்யும்!

ஒன்ராரியோ, ஏப்ரல் 09

சூரிய கிரகணத்தன்று கனடாவின் பல பகுதிகளிலும் தெளிவான வானம் காணப்பட்ட போதிலும், இந்த வாரத்தின் எஞ்சிய C2



# அமெரிக்கா, கனடாவில் நேற்று முழு சூரிய கிரகணம் தோற்றியது







ஒன்ராரியோ, ஏப்ரல் 09

அதிகம் எதிர்பார்க்கப்பட்டிருந்த சூரிய கிரகணம் மெக்சிகோ, அமெரிக்கா மற்றும் கனடா வழியாக திங்கட்கிழமை மக்களால் பார்க்கக் கூடியதாக விருந்தது.

மெக்சிகோவில் பிற்பகல் 2.07 அளவில் தென்பட ஆரம்பித்து, டெக்ஸாஸை 2.27 அளவில் கடந்து, கனடாவில் 3:19 அளவில், பல பாகங்களையும் பகுதியளவு இருளச் செய்து 3.35 அளவில் அது நிறைவு பெற்றது.

மில்லியன் கணக்கானோர் சூரிய கிரகணத்தைப் பார்வையிடுவதற்காக காத்திருந்தனர்.

முதலாவது படம் மெக்சிகோவின் மஷல்தானில் இருந்து வெளியாகியதுடன், டல்லாஸ், நயாகரா நீர்வீழ்ச்சி மற்றும் மொன்றியல் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான படங்கள் இணையத்திலும், சமூக ஊடகங்களில் பகிரப்பட்டன.

# கடந்த இரு தேர்தல்களிலும் சீனத் தலையீடு; கனடாவின் உளவு நிறுவனம் அறிந்திருந்தது

ஒன்ராரியோ, ஏப்ரல் 09

கடந்த இரு நாடாளுமன்றத் தேர்தல்களிலும் சீனாவின் தலையீடு தொடர்பில் கனடாவின் உளவு நிறுவனம் அறிந்திருந்ததாகத் தெரிய வந்துள்ளது.




கனடியத் தேர்தல்களில் வெளிநாடுகளின் தலையீடு தொடர்பில் மத்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு முன்னெடுத்து வரும் விசாரணைகளின் ஒரு கட்டமாக பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள ஆவணத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆறு பக்க ஆவணத்தில் பெப்ரவரி 2023 என திகதியிடப்பட்டு, கனடாவின் ஜனநாயக நிறுவனங்களுக்கு வெளிநாட்டு தலையீடு C2



# சூடான் மோதல் தொடர்பில் கனடா இதுவரை எதுவுமே செய்யவில்லை!

## சூடானிய - கனடிய சமூகங்களின் அமைப்பு குற்றச்சாட்டு

ஒன்ராரியோ,ஏப்ரல்9

சூடானில் இடம்பெறும் மோதல் தொடர்பில் கனடா இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை என எட்மென்டனைத் தலைமையகமாகக் கொண்ட சூடானிய - கனடிய சமூகங்களின் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

சூடானில் மோதலில் இருந்து தப்பிவர முயற்சிக்கும் கனடாவில் உள்ளவர்களின் ஓர் உறவினரை யேனும் இதுவரையில் கனடா சேர்த்து வைக்கவில்லை என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

எதுவும் செய்யாது, கரிசனை கொள்வதாக அறிக்கை மாத்திரம் வெளியிடுவதில் எந்தப் பயனும் இல்லை என அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

சூடானில், மனித புதைகுழிகள், குழு வல்லுறவு, மக்கள் மீதான கொடூரமான தாக்குதல் என்பன நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும், அது தொடர்பில் எதுவும் செய்யமால் சூடான் மக்களை தோல்வியடை யச் செய்து வருதாகவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

# 2 வருடங்களுக்கு முன் 22 வயது இளைஞன் உயிரிழந்தமை தொடர்பில் நால்வர் கைது!

பிரிட்டிஷ் கொலம்பியா,ஏப்ரல்09

பெண்டிக்டன், பிரிட்டிஷ் கொலம் பியாவில் 22 வயது இளைஞன் ஒருவன் வயலில் படுகாயமடைந்த நிலையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இறந்த சம்பவம் தொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களின் பெயர்கள் எது வும் வெளியிடப்பட மாட்டாது என்றும், டைக் சாவேஜ் இறந்த சம்பவம் தொடர்பில் இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர் என பிரிட்டிஷ் கொலம் பிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




22 வயதான சாவேஜ், பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள எக்கார்ட் அவென்யூவில் உள்ள வயலில் கடுமை யான காயங்களுடன் காணப்பட் டார்.

அங்கிருந்து மீட்கப்பட்டு, வைத் தியசாலைக்கு கொண்டு சென்றதன் பின்னர்ச்சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரும் காவலில் இருக்கிறார்கள் அல்லது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படு வார்கள் எனப் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

இந்த விவகாரம் நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளதால், கூடுதல் விவரங்கள் எதுவும் வெளியிடப்பட மாட்டாது என பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

**கடந்த இரு...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் பிரதமரின் அலுவலகத் திற்கான விளக்கம் எனத் தலைப் பிடப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டில் எழுந்த வெளி நாட்டுத் தலையீடு குறித்த வதந்தி யைத் தொடர்ந்து கனடிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வுச் சேவைகளால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள் ளது.

வெளிநாட்டுத் தலையீடு தொடர்பில் இந்த பிரிவினால் சுமார் 34 அறிக்கை கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும், அதில் 2018 முதல் 2022 வரையான காலப்பகுதியில் கடந்த இரண்டு நாடா ளுமன்ற தேர்தல் சார்ந்த அறிக்கை களும் உள்ளடங்குகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

**இந்த வாரத்தில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் கடும் மழை பொழியக் கூடும் என வானிலை அவதான நிலை யம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சூரிய வெளிச்சம் மற்றும் வெப்ப காலநிலையானது வளிமண்டல வியலில் ஏற்படுத்திய தாக்கம் காரண மாக, இன்று செவ்வாய்க்கிழமையன்று ஒன்ராரியோ தென்பகுதியில் இடியுடன் கூடிய மழைக்கான வாய்ப்பு உள்ளதாக எதிர்வுகூறப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக் கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




# ஆர்க்டிக்கின் சுயாதீனத்தைப் பாதுகாக்க வடக்கில் கனடா இராணுவம் தீவிரமாகும்

ஒன்ராரியோ, ஏப்ரல் 09

காலநிலை மாற்றம் மற்றும் எதிரிகளின் அதிகரித்த ஆக்கிரமிப்பு ஆகியன ஆர்க்டிக் பகுதியின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதால், அடுத்த இரண்டு தசாப்தங்களில் வடக்கில் ஒரு பெரிய பங்கை எடுக்க உள்ளதாக கனடிய இராணுவம் தெரிவித்துள்ளது.

'எங்கள் வடக்கு, வலுவான மற்றும் சுதந்திரமான' என்ற பாதுகாப்பு கொள்கையின் கீழ் அடுத்த 20 ஆண்டுகளில் மேலும் 73 பில்லியன் டொலர்கள் ஒதுக்கப்படும் என கனடிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்த பணம் எவ்வாறு செலவிடப்படும் என்பதற்கான சில விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

♦ கனடாவில் புதிய பீரங்கி வெடிமருந்துகளின் உற்பத்தியை அதிகரிக்கவும், சொந்த கையிருப்புக்காக ரவுண்டுகளை வாங்கவும் 9.5 பில்லியன் டொலர்கள்.

♦ சி.எச்.-146 கிரிஃபன் கடற்படைக்கு பதிலாக புதிய தந்திரோபாய ஹெலிக்கொப்டர்களுக்கு 18.4 பில்லியன் டொலர்கள்.

♦ மு இராணுவத்திற்கு நீண்ட தூர ஏவுகணைகளை வாங்க 2.7 பில்லியன் டொலர்கள்.

♦ ஏவுகணைகள், நீருக்கடியில் அமைப்புகள், கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறியும் சிறப்பு கடல்சார் உணரிகளுக்கு 1.4 பில்லியன் டொலர்கள்.

♦ 307 மில்லியன் டொலர்கள் வான்வழி முன்னறிவிப்பு விமானம்.

♦ புதிய கனேடிய ஆயுதப்படை சைபர் கட்டளைக்கு 2.8 பில்லியன் டொலர்கள்.

♦ எதிரிகளால் தொடர்புகளை தடை செய்யவோ அல்லது இடையூறு செய்யவோ முடியாத உலகளாவிய செயற்கைக்கோள் தொடர்பு திறனை வாங்குவதற்கு 5.5 பில்லியன் டொலர்கள்.

♦ அடுத்த 20 ஆண்டுகளில் இருக்கும் உபகரணங்களுக்கான முக்கியமான புதுப்பிப்புகளுக்கு 9 பில்லியன் டொலர்கள்.

♦ ஹாலிஃபாக்ஸ்-வகுப்பு போர்க் கப்பல்களின் ஆயுளை நீட்டிக்க மற்றும் கடலில் நிரப்பும் திறன்களுக்கு 9.9 பில்லியன் டொலர்கள்.




# பிரிட்டிஷ் கொலம்பியாவில் மீண்டும் கொவிட் தடுப்பூசி பூஸ்டர் வழங்கல்

பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல் 09

மற்றொரு சுற்று கொவிட்-19 தடுப்பூசி பூஸ்டர்களை பிரிட்டிஷ் கொலம்பியா வழங்கவுள்ளது.

எக்ஸ்.பீ.பீ. 1.5 ஒமிக்ரோன் வகை கொவிட்-19இற்கு எதிராக பூஸ்டர் தடுப்பூசி பெறாதவர்களை இலவசமாக இதனைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரிட்டிஷ் கொலம்பியா சுகாதார அமைச்சு கோரியுள்ளது.

அழைக்கப்படும் மற்றவர்களில் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள், 55 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பழங்குடியினர், நீண்ட கால பராமரிப்பு இல்லங்கள் மற்றும் உதவிவாழ்க்கை வசதிகளில் வசிப்பவர்கள் மற்றும் 'மருத்துவ ரீதியாக மிகவும் பாதிக்கப்படக்கூடிய' ஆறு மாதங்களுக்கும் மேலான எவரும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.






# வாகன விபத்தில் நேற்று சைக்கிளோட்டி மரணம்

ஒன்ராரியோ, ஏப்ரல் 09

பே வியு பகுதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் 59 வயதான சைக்கிளோட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காலை 9.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக டொரன்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சைக்கிளோட்டி பேவியூ அவேயில் வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, டான் வெலி பார்க்வேயில் இருந்து வெளியேறும் 2023 ஃபோர்டு ப்ரோன்கோ ஸ்போர்ட்டை ஓட்டிச் சென்ற 38 வயதுடைய நபரே விபத்தை ஏற்படுத்தினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து நடந்து சுமார் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த சைக்கிளோட்டி சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துக்கான காரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# மறுபயன்பாட்டு காகிதப் பைகளின் முறைமைக்கு மாறும் ஒன்ராரியோ

ஒன்ராரியோ, ஏப்ரல் 09

ஒன்ராரியோவின் முதல்வரின் கோரிக்கையைத் தொடர்ந்து காகிதப் பைகள் விரைவில் மறுபயன்பாட்டு ரகமாகத் தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிரவுன் கார்ப்பரேஷனின் தலைமை நிர்வாக அதிகாரிக்கு எழுதிய கடிதத்தில், மறுபயன்பாட்டு பைகளின் கொள்கையை மாற்றியமைக்க 'உடனடி நடவடிக்கைகளை' எடுக்க விரும்புவதாகக் ஒன்ராரியோவின் முதல்வர் டக் ஃபோர்ட் கோரியிருந்தார்.

'பல ஒன்ராரியோ குடும்பங்கள் ஏற்கனவே தேவைகளை பூர்த்தி செய்யப் போராடும் நேரத்தில், ஒவ்வொரு கூடுதல் செலவும் கணக்கிடப்படுகிறது' என்று ஏப்ரல் 7 திகதியிட்ட கடிதத்தில் டக் ஃபோர்ட் குறிப்பிட்டிருந்தார்.

ஒன்ராரியோவின் மதுபானக் கட்டுப்பாட்டு வாரியம் ஏப்ரல் 2023 இல் இலவச காகிதப் பைகளை நிறுத்துவதாக அறிவித்தது.

இது ஒவ்வொரு ஆண்டும் 188,000 மரங்களை காப்பாற்றுவதற்கு சமமாக இருக்கும் என்று அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்தக் கொள்கை ஏழு மாதங்களுக்கு முன் கடந்த செப்டம்பர் மாதம் நடைமுறைக்கு வந்தது.



# உயர்மாடிக் கட்டடத்தில் தீ இருவருக்குக் கடுங் காயம்

ஒன்ராறியோ, ஏப்ரல் 09 எட்டோபிகொக் பகுதியில் வீடொன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த இருவரும் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

டன்டாஸ் ஸ்ட்ரீட் வெஸ்ட் பகுதியில் உயர்மாடிக் கட்டடம் ஒன்றில் திங்கட் கிழமை காலை 9:42 அளவில் இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது.



